Thu, 20 Jul-17; Daily Thanthi - Chennai; Size : 167 sq.cm.; Circulation:-;
Page : 6

# பங்குச்சந்தை துளிகள்

★ **குஜராத்ஸ்டேட் பெட்ரோநெட்** பங்குகளை படிப்படியாக வாங்கிச் சேர்க்கலாம் என கோட்டக் செக்யூரிட்டீஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த பங்கிற்கான எதிர்கால இலக்கு ரூ.182–ஆக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடிய எரிபொருள்கள் உபயோகத்திற்கு தடை விதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதும், நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் வருவாய் வளர்ச்சி அதிகரிக்க உள்ளதும் சாதகமான அம்சங்களாக இருக்கின்றன. மும்பை சந்தையில், புதன்கிழமை வர்த்தகத்தின் இறுதியில் இப்பங்கின் விலை 2.11 சதவீதம் அதிகரித்து ரூ.174.55–ல் நிலைகொண்டது.

★ **ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா** பங்குகளை வாங்கலாம் என ரிலையன்ஸ் செக்யூரிட்டீஸ் நிறுவனம் பரிந்துரை செய்துள்ளது. இந்த பங்கிற்கான எதிர்கால இலக்கு ரூ.355–ஆக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. துணை வங்கிகளை இணைத்த பிறகு இவ்வங்கியின் பலம் கூடி இருக்கிறது. குறிப்பாக அதிவேக வளர்ச்சி கண்டு வரும் சில்லரை மற்றும் சிறிய, நடுத்தர நிறுவனங்கள் கடன் பிரிவுகளில் சந்தைப்பங்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மும்பை சந்தையில் இப்பங்கின் விலை நேற்று ரூ.293.20–ல் நிலைகொண்டது. செவ்வாய்க்கிழமை இறுதி நிலவரத்துடன் ஒப்பிடும்போது இது 0.95 சதவீத ஏற்றமாகும்.

★ **சியாராம் சில்க் மில்ஸ்** ஸ்மால்கேப் பிரிவைச் சேர்ந்த நிறுவனம். இந்நிறுவனம் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகிறது. மேலும் சல்வார் கம்மீஸ் மற்றும் பாரம்பரிய உடைகள் உற்பத்தியிலும் களம் இறங்கி உள்ளது. 2015–16 முதல் 2017–18 வரையிலான காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் வரம்பு சராசரியாக 4 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.1,984 கோடியாக உயரும் என்ற மதிப்பீடு உள்ளது. இதே காலத்தில் சரி செய்த நிகர லாபமும் 10 சதவீதம் உயர்ந்து ரூ.106 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவை இப்பங்கிற்கு சாதகமான அம்சங்களாக இருக்கின்றன.

மும்பை சந்தையில், புதன்கிழமை அன்று இந்நிறுவன பங்கின் விலை 0.47 சதவீதம் குறைந்து ரூ.2,452.65–ல் நிலைபெற்றது. கடந்த நிதி ஆண்டிற்கு (2016–17) மதிப்பீடு செய்துள்ள ஒரு பங்கு லாபத்துடன் ஒப்பிடும்போது இப்பங்கு விலை தற்போது 17.7 மடங்குகளாக இருக்கிறது. இந்த வகையில் ஐந்து ஆண்டுக்கால சராசரியும் இதே அளவில் உள்ளது. இந்தப் பங்கை வாங்கலாம் என தெரிவித்துள்ள ஏஞ்சல் புரோக்கிங் நிறுவனம் எதிர்கால இலக்கை ரூ.2,500–ஆக நிர்ணயித்து இருக்கிறது.

**நிறுவனப் பங்குகள் பற்றிய பரிந்துரைகள் பங்குச்சந்தை வல்லுனர்களின் மதிப்பீடு அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. எனவே, பங்குகளில் முதலீடு செய்வோர் அந்த நேரத்தில் சந்தை நிலவரம் எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்ந்து தமது சொந்த முடிவுகளின் பேரில் அல்லது தமது முதலீட்டு ஆலோசகரின் அறிவுரையின்படி செயல்பட வேண்டும்.**